**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 15 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ஏ.எண்.1/2024 அதன் இ.பி.எண்.46/2024**

**அதன் அ.வ.எண்.215/2020**

கண்ணையன் .... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

வெங்கடேசன் .... எதிர்மனுதாரர் / மனுதாரர்

இந்த மனுவானது 04.07.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.வெங்கடேஷ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினர்களின் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1). இம்மனுவானது, நிறைவேறுதல் மனுவில் மனுதாரருக்கு எதிராக 30.08.2024 அன்று பிறப்பிவிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை நீக்கறவு செய்து உத்தரவிடவேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106 மற்றும் பிரிவு 151–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) மனுதாரர் இம்மனுவின் மனுதாரர் என்றும், நிறைவேறுதல் மனுவில் எதிர்மனுதாரர் என்றும், பிரதான வழக்கானது 13.03.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து

திருநெல்வேலி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு எண்.29/2024 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்கில் Stay Petition தாக்கல் செய்து இ.ம.எண்.1/2024 நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில், எதிர்மனுதாரர்/நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர், மனுதாரர்/நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த போது, மனுதாரருக்கு எதிராக கடந்த 30.08.2024ம் தேதி ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) மேற்படி உத்தரவின் அடிப்படையில் தபசில் சொத்தில் இருந்து 3வது தபசில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு டெலிவரி வாரண்ட் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருவதால் நிறைவேறுதல் மனுவின் சம்மனை மனுதாரர் வாங்கவில்லை என்றும், அவரது தாயார் வாங்கியுள்ளார் என்றும், அவர் படிப்பறிவு இல்லாதர் என்றும், அதனால் மேற்படி விபரத்தை மனுதாரரிடம் தெரிவிக்கவில்லை என்றும், தற்பொழுது மனுதாரரின் அண்ணன் மகள் திருமணத்திற்காக மனுதாரர் திருநெல்வேலி வந்த போது மேற்படி விபரத்தை தெரிந்து கொண்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3) மனுதாரர் அவரது வழக்கறிஞரை சந்தித்து விபரம் கேட்ட போது தான் மேற்படி நிறைவேற்று மனுவில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 3வது தபசில் சொத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற டெலிவரி வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிய வந்தது என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், மனுதாரருக்கு மேல்முறையீட்டில் நல்ல கட்சி உள்ளது என்றும், எனவே, மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) எதிருரை சுருக்கம்</u>**

3.1) மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரை கஷ்ட, நஷ்டப்படுத்த வேண்டுமென்றே எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுவில் உள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் மறுக்கிறார் என்றும், மனுதாரர் வேண்டுமென்றே நிறைவேற்றுதல் மனுவின் அழைப்பாணையை பெற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளார் என்றும், மனுதாரர் மிகவும் காலதாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார் என்றும், மனுதாரர் நிறைவேற்றுதல் நடவடிக்கையை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு நிறைவேற்றுதல் மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையோ அல்லது சான்றாவணத்தையோ முன்னிடப்படவில்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7). மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை எதிர்த்து மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், திருநெல்வேலியில் மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்பதும், இந்நிலையில், எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு தாக்கல் செய்து, அதன் பேரில் மனுதாரருக்கு சம்மன் அனுப்பப்பட்டு, மேற்படி சம்மன் சார்பு செய்யப்பட்ட பின்னரும், மனுதாரர் இந்நீதிமன்றத்தில்

ஆஜராகவில்லை என்பதால், இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவு 30.08.2024 ம் தேதி அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

8) இந்நிலையில், மனுதாரர் தனது மனுவில் மேற்படி அழைப்பாணையை தனது தாயார் பெற்றார் என்றும், அவர் படிப்பறிவு இல்லாதவர் என்பதாலும், மேலும் தான் வெளிநாட்டில் இருந்ததாலும், தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவானது தான் திருநெல்வேலிக்கு வந்த போது தான் மேற்படி விபரம் தெரிய வந்தது என்றும், மேற்படி தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தனக்கு மேல்முறையீட்டில் நல்ல கட்சி உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

9) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு பிரதான நிறைவேற்றுதல் மனுவில் உள்ள சங்கதிகளை மறுத்து கட்சி செய்ய ஒரு வாய்ப்பு வழங்கும் வகையிலும், மனுதாரர் 30.08.2024 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை நீக்கறவு செய்ய 21.09.2024 ம் தேதியில் உரிய காலத்திற்குள் மனு தாக்கல் செய்து விட்டார் என்பதாலும், நீதியின் நலன் கருதியும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவை செலவு தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் பால் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவாக, இம்மனுவின் செலவு தொகையாக ரூ.1000/−ஐ மனுதாரர், எதிர்மனுதாரருக்கு 18.07.2025 க்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 18.07.2025.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம்

ஆண்டு ஜுலை 15 ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.07.15 06:06:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

**1). மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** – இல்லை
**2). எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** – இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.07.15 06:06:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ. திருநெல்வேலி
இ.ஏ.எண்.1/2024
இன்
இ.பி.எண்.46/2024
இன்
அ.வ.எண்.215/2020
நாள்– 15.07.2025
வரைவு/நேரிய உத்தரவு